**அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கடத்தூர்,**

**தர்மபுரி மாவட்டம்- 635 303**

**சுற்றறிக்கை எண் : 1683 /நி2/2023 - 2, நாள் : 21.09.2023**

**பொருள்:** நிர்வாகம் – அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கடத்தூர், தருமபுரி மாவட்டம் – பயிலக விடுதி உணவகம் (Hostel Mess) - ஒப்பந்த அடிப்படையில் உணவு வழங்க விண்ணப்பங்கள் வரவேற்பது – தொடர்பாக.

-----------

இக்கல்லூரியிலுள்ள விடுதி உணவகம் (Hostel Mess) ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு நடத்துவதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விடுதி உணவகம் (Hostel Mess) பள்ளி / கல்லூரி ஏதேனுமொன்றில் நடத்தி முன் அனுபவம் பெற்றவருக்கும், தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண் : 006596/ஜ1/2022, நாள் 07.03.2022-ன் படி SHG Group மற்றும் மூன்றாம் பாலினத்தருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விடுதி உணவகதில் (Hostel Mess) விற்பனை செய்யப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் அட்டவணை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் காணும் பொருட்களின் விலையை குறிப்பிட்டு விலைப்புள்ளியுடன், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு விடுதி உணவகத்தினை (Hostel Mess) நடத்த விரும்புவர்கள் தங்களது விலைப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேல் " **விடுதி உணவக ஒப்பந்தப்புள்ளி**" என்று குறிப்பிட்டு முதல்வர், அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கடத்தூர், தர்மபுரி மாவட்டம் 635 303 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலாமாக 05.10.2023 அன்று மாலை 3.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். பெறப்படும் விலைப்புள்ளி அனைத்தும் 06.10.2023 மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும் என்றும், மேற்கண்ட காலக்கெடுவுக்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டது என்றும் அறிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. விதிமுறைகள்.
2. உணவுப்பொருட்கள் அட்டவணை

21/9/23

முதல்வர் (மு.கூ.பொ)க்காக.

21/9/23

பெறுநர்

கல்லூரி இணையதள பொறுப்பாசியர்

(கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

## நிபந்தனைகள்

1. விடுதி உணவகத்தில் தயார் செய்யப்படும் பொருட்கள் தராமானதாகவும் பொருட்களின் விலை, ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.
2. விடுதி உணவகத்தில் உள்ளே மற்றும் வெளியே எப்பொழுதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
3. அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாதப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் ஒப்பந்த புள்ளி அனுப்பக்கூடாது.
5. விடுதி உணவகத்தில் கண்காணிப்பு குழுவினர் அவ்வப்போது விடுதி உணவகத்தை பார்வையிட்டு அளிக்கும் அறிவுரைகளை தவறாது கடைப்பிடித்தல் வேண்டும்.
6. பயிலக வேலை நேரத்தில் வெளியாட்கள் யாரும் தங்களைப் பார்க்க/ பொருட்கள் வாங்க பயிலக வளாகத்தின் உள்ளே அனுமதிக்கப் படாமட்டார்கள்.
7. தங்களால் மாணவா்களுக்கோ, பணியாளர்களுக்கோ எவ்வித தொந்தரவோ பாதிப்போ இருத்தல் கூடாது. இது போன்ற நிகழ்வுகள் உண்மை என அறியப்படவுடன் தங்களுக்கு விடுதி உணவகம் நடத்த வழங்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்படும்.
8. விடுதி உணவகம் மாணவர்களுக்காக நடத்தப்படுவதால் மின்கட்டணம் மற்றும் தண்ணீர் இலவசமாக வழங்கப்படும்.
9. ஓராண்டு காலத்திற்கு தங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால் தொடர்ந்து தங்களுக்கே ஒப்பந்தம் வழங்க எவ்வித உரிமையும் கோர இயலாது.
10. ஒப்பந்தம் குறித்து முதல்வர் அவர்களின் முடிவே இறுதியானது. ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கவோ, தள்ளி வைக்கவோ முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.
11. உணவு தரக்கட்டுப்பாட்டு சான்று சமர்பித்த பின்னரே உணவு விடுதி நடத்திட அனுமதி வழங்கப்படும்.

முதல்வர் (மு.கூ.பொ)க்காக.

## அட்டவணை

## விடுதி உணவகம்

(விலை விவரம் விண்ணப்பதாரால் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்)

| வ. எண் | பொருட்களின்விவரம் | விலை விவரம் |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | டீ / காபி | |
| 2. | பருப்பு வடை / உளுந்து வடை ( 30 கி ) | |
| 3. | இட்லி 1-க்கு ( சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 4. | தோசை 1-க்கு ( சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 5. | சப்பாத்தி 1-க்கு (குரு மாவுடன்) | |
| 6. | பொங்கல் ( சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 7. | மதிய சாப்பாடு (சாதம் , குழம்பு, காய்கறி கூட்டு அல்லது பொறியல் மற்றும் ரசம்) | |
| 8. | எலுமிச்சை சாதம் | |
| 9. | தக்காளி சாதம் | |
| 10. | சாம்பார் சாதம் | |
| 11. | வெஜிடபுள்பிரியாணி | |
| 12 | கிச்சடி சட்னியுடன் | |

விடுதி உணவகம் நடத்துபவரின்
தேதியுடனான கையொப்பம்